## நான் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் யாவை?

இந்த மருந்தை எடுப்பதற்கு முன்னால், பின்வருவனவற்றை மருத்துவரிடம் தெரிவியுங்கள்:

- சிலவித உணவுகள், பதனப் பொருட்கள், சாயங்கள் அல்லது மருந்துகள், குறிப்பாக பெனிசிலின் அல்லது பெனிசிலமைன் போன்றவை உங்களுக்கு ஒவ்வாமை ஏற்படுத்தும்.
- நீங்கள் தற்போது கர்ப்பமடைந்துள்ளீர்கள் அல்லது கர்ப்பம் தரிக்க திட்டமிடுகிறீர்கள். பெனிசிலமைன் மருந்தைக் கர்ப்பக் காலத்தில் உட்கொண்டால், வயிற்றிலிருக்கும் குழந்தை குறைகளுடன் பிறந்துவிடும் அபாயமுள்ளது.
- நீங்கள் வேறு மருந்துகள் உட்கொண்டு வருகிறீர்கள்.
- சிறுநீரக நோய், அல்லது, பெனிசிலமைன் சிகிச்சையால் ஏற்பட்ட இதய நோய் போன்ற மற்ற மருத்துவப் பிரச்னைகள் உள்ளது.

இந்த மருந்து எடுக்கும்போது, குறித்துக் கொடுக்கப்படும் தேதிகளில் இரத்தப் பரிசோதனைகள் செய்து கொள்வதும், மருத்துவரிடம் வழக்கமாகச் சென்று உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்துக் கொள்வதும் அவசியம்.

## மருந்தை நான் எப்படி வைத்திருக்க வேண்டும்?

மருந்தை காற்று புகாத டப்பாவில் வைத்திருங்கள். அதன்மீது வெப்பமோ சூரிய ஒளியோ படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Ministry of Health
National Healthcare Group
SingHealth

காலாவதியான அல்லது இனிமேல் உட்கொள்ளத் தேவைப்படாத மருந்துகளை உடனே வீசிவிடுங்கள்

# நோயாளி தகவல் கையேடு

# பெனிசிலமைன்

**Penicillamine**

T57R0

மருந்துகளை எப்போதுமே பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாதவாறு வைத்திருக்கவும்

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

இந்த மருந்து, கீல்வாத மூட்டு அழற்சி (rheumatoid arthritis) மற்றும் வில்சன் நோய் (உடலில் அளவுக்கு அதிகமான செம்பு சேர்வதால் உண்டாகும் நோய்), ஆகியவற்றுக்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. சிறுநீரகக் கற்கள் ஏற்படுவது போன்ற மற்ற பிரச்னைகளைத் தடுக்கவும் இது பயன்படுகிறது.

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும் ?

நீங்கள் எவ்வளவு மருந்தை எத்தனை முறை உட்கொள்ள வேண்டும் என்பதை மருத்துவர் எடுத்துரைப்பார். மருத்துவர் கூறும் அளவுக்கு மேலாகவோ, அல்லது அவர் கூறிய வேளைகளுக்கு அதிகமாகவோ மருந்து உட்கொள்ளாதீர்கள்.

இந்த மருந்தை வெறும் வயிற்றில் எடுத்துக் கொள்வது நல்லது (உணவு வேளைக்கு குறைந்தது 1 மணி நேரம் முன்னதாக, அல்லது உணவு உண்டபின் 2 மணி நேரம் கழித்து எடுக்க வேண்டும்). மற்ற உணவுகள், பால் அல்லது வேறு மருந்துகள் உட்கொண்டால், அப்போதும் 1 மணி நேரம் முன்னதாக அல்லது 2 மணி நேரம் கழித்து இந்த மருந்தை எடுக்க வேண்டும். இரும்புச்சத்து அல்லது வைட்டமின் மாத்திரைகளை நீங்கள் எடுத்து வந்தால், அவற்றை இந்த மருந்து எடுத்த 2 மணி நேரத்திற்குள் எடுக்கக் கூடாது. அப்படி எடுத்தால் இந்த மருந்து சரிவர வேலை செய்யாது.

சிறுநீரகக் கற்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக இந்த மருந்தை நீங்கள் உட்கொண்டு வந்தால், தினமும் இரவில் உறங்கச் செல்வதற்கு முன் 2 முழுக் குவளை தண்ணீரும், அதன்பிறகு இரவுப்பொழுதில் மேலும் 2 முழுக் குவளை தண்ணீரும் அருந்த வேண்டும்.

கீல்வாத மூட்டு அழற்சிக்காக நீங்கள் இந்த மருந்தை உட்கொண்டு வந்தால், மருந்து பலனளிப்பதற்கு 2 முதல் 3 மாதங்களாகலாம். வில்சன் நோய் என்றால், முன்னேற்றம் தெரிவதற்கு 1 முதல் 3 மாதங்களாகலாம்.



நோயாளி தகவல் கையேடு I **பெனிசிலமைன**

## மருந்து உட்கொள்ள **நான் மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளையிலிருந்து வழக்கம்போல் தொடருங்கள். முதல் வேளையில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

## இம்மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை?

பின்வரும் பக்க-விளைவுகளில் ஏதேனும் இருந்தால், உடனே மருத்துவரைப் பாருங்கள்:

- காரணமில்லாத காய்ச்சல், அல்லது தொண்டைப் புண்
- வழக்கமில்லாத இரத்தப்போக்கு அல்லது காயங்கள்
- தோல் தடித்தல், சிவத்தல் அல்லது அரிப்பெடுத்தல்
- சிறுநீர் மங்கலாகவும், நுரையுடனும் காணப்படுதல்
- பார்வை குறைதல்

மற்ற பக்க-விளைவுகளில் இவை அடங்கும்:

- சுவை உணர முடியாமை அல்லது பசியின்மை
- வயிற்றுக் கோளாறு, குமட்டல், வாந்தி அல்லது வயிற்றுப்போக்கு